Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 09

திங்கட்கிழமை 05 டிசெம்பர் 2022

கார்த்திகை 19 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

## வாட்டியெடுக்கும் வைரஸ் காய்ச்சல்

### 40 சிறுவர்கள் தினமும் மருத்துவமனையில்

கொழும்பு, டிசெ. 5
இலங்கையில் பரவும் புதிய வைரஸ் காய்ச்சலால் தினமும் 40 குழந்தைகள் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சேர்க்கப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனவே காய்ச்சல் இருந்தால் உடனடி »11

## மருத்துவரின் காரிலிருந்து பெருமளவு ஹெரோய்ன் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 5
கொடிகாமம் பகுதியில் மருத்துவர் என்பதைக் குறிக்கும் அடையாளம் பொறிக்கப்பட்ட காரிலிருந்து ஒரு கிராம் 30 மில்லி கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். சந்தேகத்தில் காரில் பயணித்த 26 மற்றும் 27 வயதான இளைஞர்களைக் கைது செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீதிச் சோதனை நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இதன்போது, மருத்துவர் என்பதைக் »11

## 2023இல் 5'ஜி'

கொழும்பு, டிசெ. 5
இலங்கையில் '5ஜி' தொழில்நுட்பம் தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளை அடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இணையத்தள சேவை நிறுவனங்களுக்கு 5 ஜி தொழில்நுட்பத்தை வழங்குவது தொடர்பில்தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் அனுமதியை வழங்குவது குறித்தும் ஆராயப் பட்டுள்ளது.
(அ-ஒ-இ)

# தமிழ்க் கூட்டமைப்பு நேசக்கரம்; முற்போக்குக் கூட்டணி வரவேற்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 5
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் அனைத்துக் கட்சிகளுடன் பேச விரும்புகிறேன் என்று நாடாளுமன்றத்தில் விடுத்த அழைப்பை நாம் கவனத்தில் எடுத்துள்ளோம். இந்த நிலையில் ஜனாதிபதியின் அழைப்புத் தொடர்பில் மலையக, முஸ்லிம் கட்சிகளுடன் கலந்துரையாட விரும்புவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவை தமிழ் முற்போக்குக் கூட்டணி வரவேற்கிறது என்று கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். »11



வீதியை மறித்து

## நள்ளிரவில் கொண்டாட்டம் 10 இளைஞர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 5
பருத்தித்துறை பிரதான வீதியில் கோப்பாய் சந்திக்கு அண்மையாக நள்ளிரவு நேரம் பயணித்த தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் பெண் சட்ட மருத்துவ அதிகாரியின் கார்க் கண்ணாடிக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட் »11

யாழ்.நகர

## சாப்பாட்டுக் கடையில் 'கரப்பான் பூச்சி' வடை

யாழ்ப்பாணம், டிசெ. 5
யாழ். நகருக்கு அண்மையாகவுள்ள பிரபல சைவ உணவகம் ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட உளுந்து வடையில் உயிரிழந்த நிலையில் கரப்பான்பூச்சி காணப்பட்டுள்ளது. »11

பலவந்தமாக

## மாணவனுக்கு மதுபானம்: வீதியில் வீழ்ந்து காயம்!

கிளிநொச்சி, டிசெ. 5
கிளிநொச்சியில் தனியார் கல்வி நிலையத்தில் 16 வயது மாணவனுக்கு குடிதண்ணீருடன் மதுபானத்தை கலந்து ஏனைய மாணவர்கள் பருக்கியுள்ளனர். இதனால் நிலை தடுமாறி கீழே விழுந்த அவன் காயங்களுடன் யாழ்ப்பாணம் »11

## ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு!

### வவுனியாவில் பரிதாபம்

வவுனியா, டிசெ. 5
வவுனியா, மெனிக்பாம் பகுதியில் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். »11

## சிவில் பாதுகாப்பு பணியாளர்கள் கிளிநொச்சியில் அத்துமீறல்

மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 5
பொதுமக்களைச் சோதனையிடும் அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பணியாளர்களுக்கு யார் வழங்கினர் ? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து சோதனையிடுவதற்கான அதிகாரம் இவர்களுக்கு எப்போது வழங்கப்பட்டது என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.
மாங்குளம், துணுக்காய் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 52 அரசாங்க நிறுவனங்கள் நஷ்டத்தில் செயற்படுகின்றன

## நிதி அமைச்சின் அறிக்கைகள் கட்டியம் வருடாந்த இழப்பாக 8,600 கோடி ரூபா

கொழும்பு, டிசெ. 5

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 420 அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்க வியாபார நிறுவனங்களில் 52 நிறுவனங்கள் பெரும் நஷ்டத்தில் இயங்குகின்றன என்று நிதி அமைச்சின் சமீபத்திய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

அதிக நஷ்டத்தைச் சந்திக்கும் 52 அரச நிறுவனங்களின் வருடாந்த இழப்பு சுமார் 8 ஆயிரத்து 600 கோடி ரூபா எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவைக்கு தெரிவிக்கும் வகையில், உரிய நிறுவனங்களின் பட்டியலையும், அவற்றால் ஏற்பட்ட இழப்புக் குறித்த முழு விவரங்களையும் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு இழப்பைச் சந்தித்துள்ள அரச நிறுவனங்களில் கடும் நஷ்டத்தில் உள்ள நிறுவனங்களை விரைவாக மறுசீரமைக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. (ம)

# மின்கட்டண அதிகரிப்பு நியாயமில்லாத செயல்

## ஆளும் பெரமுனவின் எம்.பி. அபேகுணவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 5

நாட்டில் தற்போது மின்கட்டணத்தை அதிகரிப்பது நியாயமற்ற செயல் என ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுஜன பெரமுன என்ற வகையில் நாட்டின் பொருளாதாரம் இக்கட்டான நிலையில் இருப்பதையும் அது மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது என்பதையும் நாம் அறிவோம். மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

சமீபத்தில் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. இதேவேளை- எரிபொருள் மற்றும் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

இப்போது மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால், இதனை மக்களால் தாங்கிக்கொள்ளமுடியாது.

உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ள நிலையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தும் முடிவை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டும். தற்போது நம் நாட்டில் சுற்றுலாத்துறை வளர்ச்சி அடையும் நிலை காணப்படுகின்றது.

எனவே சுற்றுலாப்பயணிகள் வருகையின்போது தமது நேரத்தைச் செலவிட விரும்புகின்ற பிரதேசங்களில் மின்சாரம் தடைபடுவதைத் தவிர்க்குமாறு அரசாங்கத்திடமும் அமைச்சரிடமும் கோரிக்கை விடுக்கின்றோம் - என்றார். (ம)

# அரிசி இறக்குமதியை உடனடியாக நிறுத்துக

கொழும்பு, டிசெ. 5

அரிசி இறக்குமதி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என விவசாயத்துறை மற்றும் வனவளப்பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரிசி இறக்குமதி உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டால்தான் உள்நாட்டு நெல்லின் விலை அதிகரிக்கும்.

தற்போது, வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டாலும் விலை குறைவடையவில்லை. அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லைக் கொள்வனவு செய்வதைவிடுத்து அரிசியைக் களஞ்சியப்படுத்துகின்றனர்.

இந்த விடயத்தில் அனைவரும் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் - என்றார். (ம)

# 10,000

## தொழில்நுட்ப வல்லுநர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றம்!

கொழும்பு, டிசெ. 5

பொருளாதார நெருக்கடி காரணமாக சுமார் 10 ஆயிரம் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்று இலங்கை கணினிச் சங்கத்தின் தலைவர் தமித் ஹெட்டிஹேவா தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள தொழில்நுட்ப வல்லுநர்களின் எண்ணிக்கையில் 10 ஆயிரம் என்பது 10 வீதம். அதாவது 10 வீதமான தொழில்நுட்ப வல்லுநர்களை நாம் இழந்துள்ளோம். வெளிநாடுகளில் தகவல் தொழில்நுட்பத்துக்கான வேலை வாய்ப்புச் சந்தை வளர்ந்து வருவதால் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவது அதிகரித்துள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# அருகதையில்லாத அரசாங்கத்தை உருவாக்கியதற்காக மன்னியுங்கள்

## ஓமல்பே சோபித தேரர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 5

உலகத்திடம் கையேந்திக் கொண்டிருக்கும் துரதிர்ஷ்டவசமான நாடாக இலங்கை மாறும் நிலைமை ஏற்படுவதற்கு நாமும் காரணமாகியுள்ளோம். அறியாமல் இழைத்த இந்தத் தவறுக்காக முதியோரிடத்திலும் இளைஞர்களிடத்திலும் மன்னிப்புக் கோருகின்றோம். கபடகுணமும் சுயநலமும் கொண்ட அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டு நாம் இந்த நிலைமை உருவாகக் காரணமாகிவிட்டோம் இவ்வாறு ஓமல்பே சோபித தேரர் குறிப்பிட்டார்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டிலுள்ள முதியோரிடத்திலும் இளைஞர்களிடத்திலும் மன்னிப்புக் கோருகின்றோம்.

இவ்வாறான துரதிர்ஷ்ட நிலைமை இந்த நாட்டில் ஏற்படுவதற்கு நாமும் பங்களித்திருக்கின்றோம் என்பதற்காகவே இவ்வாறு மன்னிப்புக் கோருகின்றோம்.

உண்மையில் அறியாமலேயே நாம் இந்தத் தவறை இழைத்துள்ளோம்.

நாட்டில் தற்போதுள்ள சிறுவர்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் ஒரு லட்சம் ரூபா கடன் சுமையைக் கொண்டவர்களாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இனி பிறக்கவிருக்கும் குழந்தை மீதும் கடன் சுமை சுமத்தப்பட்டுள்ளது.

முழு நாடும் தற்போது குண்டர்களுக்கு கீழ்ப் பணிந்துள்ளது.

இந்தக் குண்டர்களின் அடாவடிச் செயற்பாடுகள் இன்னும் நிறுத்தப்படவில்லை. மின் கட்டணம் நூற்றுக்கு 700 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், மீண்டும் 70 சதவீதத்தால் மின் கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாகக் கூறுகின்றனர்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட குண்டர்கள் மின் கட்டணத்தைச் செலுத்துவதில்லை.

இவ்வாறானவர்கள் 39 பில்லியன் ரூபாவை இலங்கை மின்சாரசபைக்குச் செலுத்தவேண்டியவர்களாக உள்ளனர். ஆனால், வறுமையிலுள்ள நாம் அவர்களது கட்டணத்தையும் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம் - என்றார். (ம)

# குறைந்த செலவில் மின்னுற்பத்தி; வாய்ப்பை கைவிடும் அதிகாரிகள்!

கொழும்பு, டிசெ. 5

குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகளை அதிகாரிகள் தவிர்த்து வருவதாக மின் பொறியியலாளர்கள் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் மின் பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரத்ன தெரிவித்ததாவது:-

களனிதிஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் நேற்றிரவு முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மின்னுற்பத்தி ஆலைகளை செயற்படுத்துவதற்கான நெப்தா எரிபொருள் இன்மையே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி அல்லது டீசல் மூலம் மின்னுற்பத்தி செய்யப்படுவதை விடவும் நெப்தாவைப் பயன்படுத்தினால் செலவு ஒப்பீட்டளவில் மிகக்குறைவாகும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவ.நகரசபை 2023 பாதீடு:

## சபை உறுப்பினர்களுக்கு ஒரு மில்லியன் ஒதுக்கீடு

சாவகச்சேரி, டிசெ. 5

2023ஆம் ஆண்டுக்கான உத்தேச பாதீட்டில் நகர அபிவிருத்திக்கென சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் தலா ஒரு மில்லியன் ரூபா சாவகச்சேரி நகரசபையால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை உத்தேச பாதீடு தயாரிக்கும்போது வட்டாரத்துக்கு ஒன்றரை மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படும்.

வட்டாரத்துக்கு நிதியொதுக்கப்படுவதால் தாம் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது என்று விகிதாசார ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தநிலையில் 2023ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் சாவகச்சேரி நகரசபையின் 11 வட்டாரங்களுக்கான 18 உறுப்பினர்களுக்கும் தலா ஒரு மில்லியன் வீதம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ச-9)

# வலி.வடக்கில் மீதமுள்ள நிலங்களை விடுவிக்குக

### வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 5

வலிகாமம் வடக்கில் இராணுவத்தின் வசமுள்ள (விடுவிக்கப்படாதுள்ள) நிலங்களை விடுவித்தால் வலி.வடக்கு மக்கள் சுயமாகவே முன்னேற்றமடைவர் என வலி.வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

தையிட்டி - வள்ளுவர்புரத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

30 வருடங்களின் பின் மீள்குடியமர்த்தப்பட்ட வலி.வடக்கு மக்கள் தமது பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர்.

சுமார் நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்குள் பல குடும்பங்கள் தாமாகவே சுயமாக முன்னேறியுள்ளன.

வலி.வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள ஏனைய பிரதேசங்களையும் விடுவிக்கவேண்டும். அவ்வாறு விடுவிக்கப்பட்டாலேயே மக்கள் தமது வாழ்வைப் பார்த்துக்கொள்வார்கள்.

தமது நிலம் தமக்கு வேண்டும் என்பதுதான் அந்தப் பகுதி மக்களின் முதலாவது கோரிக்கையாக உள்ளது - என்றார். (ச-26)

தென்னை அபிவிருத்திச் சபையால்

## மாணவர்களுக்கு இதுவரை 14,400 தென்னம்பிள்ளைகள்!

யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ். மாவட்டத்தில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக சமூக அமைப்புக்களின் உதவியுடன் பாடசாலை மாணவர்களுக்கு இதுவரைக்கும் 14 ஆயிரத்து 400 வரையிலான தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டுள்ளன என்று தென்னை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

போதைக்கு எதிரான செயற்திட்டம் மரநடுகை ஊக்குவிப்பு என்பனவற்றை தென்னை அபிவிருத்திச் சபை அண்மைக்காலமாக மேற்கொண்டுவருகின்றது.

இந்தத் திட்டங்களின்போது தென்னை அபிவிருத்திச் சபையால் மாணவர்களுக்கு தென்னம்பிள்ளைகள் வழங்கப்படுகின்றன. இதுவரை 14 ஆயிரத்து 400 தென்னம்பிள்ளைகள் இவ்வாறு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (ம-14-17)

## இணையப் பயன்பாடு யாழில் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 5

டிஜிற்றல் அறிவை மேம்படுத்தும் முகமாக 'கபே' அமைப்பு நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துவரும் 'ஜனனி வேலைத்திட்டம்' வடக்கு மாகாணத்தில் தற்போது இடம்பெற்றுவருகின்றது.

அதன் ஒரு பகுதியாக யாழ். மாவட்டத்துக்கான செயலமர்வு யாழ். நூலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது இணையப் பயன்பாடு மற்றும் இணையத்தைப் பயன்படுத்தும்போது முன்னெடுக்கவேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்துத் தெளிவூட்டப்பட்டது.

நிகழ்வில் 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர், 'கபே' அமைப்பின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர், பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் பங்குபற்றினர். (ச-27-159)

## கிளி. மலையாளபுரத்துக்கு இ.போ.ச. சேவை ஆரம்பம்

கிளிநொச்சி, கிருஷ்ணபுரம்- மலையாளபுரம் பகுதிகளுக்கான இ.போ.ச. பேருந்து சேவை கிளிநொச்சி சாலையிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

அண்மையில் கிளிநொச்சி வளாகத்தில் இயங்கிவந்த கிளிநொச்சி மாவட்டத்துக்கான பெண் நோயியல் மார்பக சிகிச்சை நிலையம் கிருஷ்ணபுரத்தில் அமைந்துள்ள தொற்றுநோயியல் மருத்துவமனை வளாகத்துக்கு மாற்றப்பட்டது.

எனினும், குறித்த பகுதிக்கு பேருந்துச் சேவையின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இந்த நிலையிலேயே பேருந்துச் சேவையொன்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு முன்னாள் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ந.சரவணபவன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததுடன் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதும் சுட்டிக்காட்டினார்.

இதையடுத்து, கிளிநொச்சி, கிருஷ்ணபுரம் - மலையாளபுரம் ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்துச் சேவை தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (ச-113)

# பெண்களின் அரசியல்பிரவேசத்தை வலுப்படுத்துவதற்காக ஒன்றிணைக

### 'கபே' அமைப்பினரிடம் ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், டிசெ. 5

இலங்கையில் பெண்களின் அரசியல் வகிபங்கை உறுதிப்படுத்துவதற்காக பெண்கள் அமைப்புக்கள் ஓரணியில் இணைந்து ஒரு பலமான கட்டமைப்பை உருவாக்கவேண்டும். இந்தத் திட்டத்தின் மூலம்தான் ஆளுமை மிக்க பெண் அரசியல் செயற்பாட்டாளர்களை உருவாக்கலாம் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

'கபே' அமைப்பின் பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பெண் அரசியல் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டவர்களுடன் 'உதயன் பணிமனையில்' நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய காலகட்டத்தில் பெண்களுடைய பங்குபற்றுதல்கள் முன்னரைவிட கல்வி, தொழில் உட்பட பல துறைகளிலும் அதிகரித்து வருகின்றமையைக் காணமுடிகிறது. ஆனால், அரசியலில் பெண்கள் பின்நிற்கின்றனர்.

பெருமளவிலான பெண்கள் அரசியலில் நுழைய விருப்பங்கள் தெரிவிக்கின்ற போதிலும் குடும்ப மற்றும் சமூக காரணங்கள், குடும்ப பொறுப்புக்கள், பிறழ்வான விமர்சனங்கள் அவர்களின் அரசியல் வாழ்க்கைக்குத் தடைபோடுகின்றது.

உள்ளூராட்சி மன்றங்களில் 25 வீதமான ஒதுக்கீடு பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த இடங்களுக்குக்கூட பெண்கள் தாமாக முன்வராமல் அரசியல் கட்சிகளின் வலிந்த நிர்ப்பந்தங்களின் அடிப்படையிலேயே தேர்தல்களில் போட்டியிடுகின்றனர். ஆதலால் அரசியல் அடிப்படையில் பெண்களை வலுவூட்டலும் அரசியலில் பங்குபற்றுதல் தொடர்பான விளக்கங்களை வழங்குதலும் அவசியம் ஆகும். அவர்களிடத்தே மாற்றங்கள் ஏற்பட வேண்டியது தற்போது காலத்தேவை.

பெண்கள் அரசியலுக்குள் நுழைகின்றபோது அவர்களின் பாதுகாப்பையும் அவர்களுக்கான ஆதரவையும் கட்சிகளும் சமூக அமைப்புகளும் உறுதிப்படுத்தவேண்டும்.

எனவே பெண்களுடைய அரசியல் ரீதியான பிரவேசத்தை ஊக்குவிக்க உறுதுணையளிக்கும் சமூகச் சங்கிலிகளை வலுப்படுத்துவோம் - என்றார்.

உதயன் அலுவலகத்திலும், அலுவலகத்துக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்த அவதானிப்புக்களையும் 'கபே' அமைப்பினர் பார்வையிட்டனர். (ச)

பல லட்சம் ரூபா செலவிட்டும் பயனில்லை

## காட்சிப்படுத்தல் பொருளாக இரும்புக்கம்பியிலான மேடை

சாவகச்சேரி நகரசபையால் பொதுச் சந்தை மரக்கறி அலகின் வியாபாரிகளுக்கென அமைக்கப்பட்ட இரும்புக்கம்பியிலான மேடை சந்தைக் கட்டடத்தின் ஒரு பகுதியில் காட்சிப்படுத்தல் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சந்தையின் மரக்கறி வியாபாரிகள் விற்பனைப் பொருள்களை நிலத்தில் வைத்து விற்பனை செய்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு உயரமான இடத்தில் வைத்து வியாபாரம் செய்வதற்கு பல மில்லியன் ரூபா செலவில் பத்து அடி அகலம், நான்கு அடி உயரத்தில் இரும்புக்கம்பியிலான மேடைகள் அமைக்கப்பட்டன.

அவை அண்மையில் சந்தைக்குக் கொண்டு வரப்பட்டு வியாபாரிகளை மேடையில் வைத்துப் பொருள்களை விற்பனை செய்யுமாறு நகரசபையினர் அறிவித்துள்ளனர்.

நான்கு அடி உயரத்தில் மேடை அமைக்கப்பட்டிருந்ததால் வியாபாரிகள் அதனைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. இதனால் மேடை சந்தைக் கட்டடத்தின் ஒரு பகுதியில் காட்சிப்படுத்தல் பொருளாக வைக்கப்பட்டுள்ளது. (ஓ-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சிப் பகுதியில் 158 பேருக்கு டெங்கு

சாவகச்சேரி, டிசெ. 5

தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை 158 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் மக்களை அவதான மாகச் செயற்படுமாறு சாவகச் சேரி சுகாதாரத்துறையினர் எச்ச ரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் மட்டும் மட்டுவில், நாவற்குழி, கைதடி, மந்துவில், கொடிகாமம், எழுது மட்டுவாழ், சாவகச்சேரி போன்ற பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் 12 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர் என அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது மழைகாலம் ஆரம் பித்துள்ளதால் தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதனால் பொதுமக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணி கள் என்பவற்றில் காணப்படும் நீரேந்துப் பொருள்களை அப் புறப்படுத்தி டெங்கு நுளம்பு உற்பத்தியாகாமல் தடுக்குமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியி னர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் மக்களை எச்சரிக்கை யாக இருக்குமாறும் சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள் ளனர். (ம-14-9)

# மாணவர்களின் நல்வழிப்படுத்தலை பெற்றோரிடம் ஒப்படைத்தலே நன்று

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவிப்பு



கொடிகாமம், டிசெ. 5

மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்கு தண்டனை வழங்க முற்படுகின்றபோது அதிபர், ஆசிரியர்களுக்கு எதி ராகவே சட்டம் பிரயோகிக்கப்படுகிறது. இதனால் ஆசிரியர்களே மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தும் கலந்து ரையாடல் ஆசிரியர் சேவை சங்கத்தின் தலைமை காரி யலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரி வித்த சங்கத்தின் உபசெ யலாளர் யாழினி கங்கா சுதன் தெரிவிக்கையில்: மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் அவர்களிடையே அதி கரித்துவரும் போதைப் பொருள் பாவனை போன்ற துர்செயற்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கும் போது அதிபர், ஆசிரி யர்களுக்கு எதிராகவே பொலிஸார், சிறுவர் பாது காப்பு அமைப்பு செயற்படு கின்றன.

அண்மைக்காலத்தில் இவ் வாறான பல சம்பவங்கள் வடக்கு மாகாணத்திலிலும் இடம்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலை ஒன்றிலே மாண வரின் தவறான நடவ டிக்கை தொடர்பில் ஆசி ரியர் ஒருவர் விசாரணை ஒன்றை மேற்கொண்ட போது பாடசாலை நேரத்தில் மாணவனின் பெற்றோர் பாடசாலைக்குள் புகுந்து ஆசிரியரை தாக்கிய சம் பவமும் பதிவாகியுள்ளது. இங்கு ஆசிரியர் தொடர் பில் யாரும் அக்கறை காட்ட வில்லை.

எனவே இவ்வாறான அசௌ கரியங்களை தவிர்ப்பதற் காக ஆசிரியர்கள் மாண வருக்கு நேரடியாகத் தண்டனை வழங்குவதை தவிர்த்து, மாணவர்களின் பெற்றோரை அழைத்து நல்வழிப்படுத்துவதற்கான பொறுப்பை அவர்களிடமே ஒப்படைத்தல் நன்று.

மாணவர்களுக்கு உடல், உள ரீதியான தண்டனை கள் எதனையும் வழங்கக் கூடாது என்பதே இலங்கை ஆசிரியர் சேவை சங்கத் தின் நிலைப்பாடாகும் - என் றார். (ச-159)

## 42 லீற்றர் கோடாவுடன் இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 5

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும் பிராய் பகுதியில் 42 லீற்றர் கோடாவுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை கைது செய்யப்பட்டார் என்று கோப் பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உரும்பிராய் - விளாத்தியடிப் பகுதியில் கசிப்புக் காய்ச்சுமிடம் ஒன்று உள்ள தென்று கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய அந்தப் பகுதி முற்றுகையிடப்பட்டது.

இதன்போதே 42 லீற்றர் கோடாவும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய பொருள்களும் கோப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அத்துடன் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் 38 வயதான அதே பகுதியைச் சேர்ந்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டார். (ம-14-125-26)

## மீன்களின் விலை வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ்ப்பாணக்குடாநாட்டில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மீன்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட் டிருந்தது.

அதிலும் குறிப்பாக பாரை இன மீன்கள் பரவலாகப் பிடிபட்டதால் அனைத்துச் சந் தைகளிலும் அதன் வரத்து இருந்தது.

இதன்படி ஒருகிலோ சூவாப்பாரை மீன் 300 ரூபா முதல் 450 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது. (ம-14-17)

## உடைமையில் கஞ்சா; 6 மாதம் சிறைவாசம்!

### நீதிமன்று உத்தரவு

சாவகச்சேரி, டிசெ. 5

கஞ்சாவை உடைமையில் வைத் திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய் யப்பட்ட சந்தேகநபருக்கு 6 மாதச் சிறைத்தண்டனையும் 9 ஆயிரம் ரூபா தண்டமும் சாவகச்சேரி நீதிமன் றால் விதிக்கப்பட்டது.

நாவற்குழி கிராம அலுவலர் பிரிவுக் குட்பட்ட பகுதியில் பொலிஸாரும் மது வரி திணைக்களத்தினரும் இணைந்து அண்மையில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப் பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

குறித்தநபர் தனது குற்றத்தை ஒப் புக்கொண்டதை அடுத்து அவருக்கு 6 மாதம் சிறைத்தண்டனையும் 9 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பிட்டது. (ச-9)

## செம்மணி மயானத்தை மின்மயமாக மாற்றத் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ்ப்பாணம், செம்மணி இந்து மயானத்தை மின் மயானமாக மாற்றியமைப் பதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதுதொடர்பில் செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையின் தலைவர் சி.இலட் சுமிகாந்தன் ஊடகங்களுக் குத் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் என 3 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட செம்மணி இந்து மயானத்தை 4 ஆயிரம் மக் கள் பயன்படுத்துகின்றனர்.

சூழலைப் பாதுகாக்கும் மு மாகவும் மரங்களை வெட் டுவதை நிறுத்தும் பொருட் டும், விறகுகளின் நாளாந்த விலையேற்றத்தைக் கணக் கிலெடுத்தும் செம்மணி மயா னத்தை மின்மயானமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

இந்தச் செயற்றிட்டத்தை நடை முறைப்படுத்த மயானத்தைப் பயன்படுத்தும் மக்கள் ஆர்வலர்கள் தங்களாலான பங்களிப்பை வழங்கவேண் டும் - என்றார். (ச-20)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகள் அனு கூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூல மான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங் கிக் கொடுப்பீர்கள் சிலருக்கு எதிர்பா ராத பணவரவுகிடைக்கும் நண்பர்கள்வகை யில் திடீர் ஆதாயம் கிடைக்கக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். சகோதர வகையில் எதிர்பாராத சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** சிந்தித்துச் செயற்பட வேண் டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வியா பாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** கணவன் - மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதி கரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வியா பாரம் வழக்கம் போலவே இருக்கும்.

**துலாம்:** எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும். உறவி னர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தி னர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர் கள். குடும்பத்தில் உங்கள் ஆலோச னைக்கு முக்கி யத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்கு மேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வ தைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கிய மான முடிவு எடுக்க உகந்த நாள். தாயின் விருப்பத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பக லுக்கு மேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோ தரரால் சங்கடங்கள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# குழந்தைப் பேறின்மையும் ஓர் இனத்தின் இருப்பும்

யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்தில் ஒரு தம்பதியர் சுமார் 20 வீதத்தினர் குழந்தைப் பேறின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சித்தகவலை வெளியிட்டுள்ளார் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளரும், சிறுநீரக மற்றும் சனனித்தொகுதி அறுவைச் சிகிச்சை நிபுணருமான பா.பாலகோபி. வெறுமனே ஒரு மருத்துவரின் அறிவிப்பாக மட்டும் இந்தத் தகவலைக் கடந்துபோய்விட முடியாத நிலையில் எம்மினம் இருக்கின்றது.

இலங்கையில் உள்ள ஏனைய இனத்தவர்களைவிடவும் சனத்தொகைப் பரம்பலில் மிகப்பெரிய வீழ்ச்சியைச் சந்தித்த, சந்திக்கின்ற இனமாக தமிழர்களே இருக்கின்றனர். மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த போர்தான் தமிழர்களின் குடிப்பரம்பலில் அதீத தாக்கத்தைச் செலுத்திய காரணி. நேரடியாகவும், மறைமுகமாகவும் உள்நாட்டுப் போரால் தமிழர்கள் தங்கள் இருப்பையும், உயிர்களையும் தொலைக்கவேண்டியேற்பட்டது. போரின் நேரடி விளைவால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். தமது சொந்த இடத்தில் இருந்து தமிழ் மக்கள் படைத்தரப்பால் விரட்டியடிக்கப்பட்டார்கள். போரின் வெம்மையில் இருந்து தப்பிப்பதற்காக நிகழ்ந்த புலப்பெயர்வும் தமிழர்களின் குடிப்பரம்பலில் ஏற்படுத்திய தாக்கங்கள் கொஞ்சநஞ்சமல்ல. தாயகத்து வீதிகள் தங்கள் மண்ணுக்குரியவர்களை இழந்து வெறிச்சோடின. ஆள்களற்ற வீடுகளும், காணிகளும், புதர்மண்டிய பற்றைக் காடுகளுமே எஞ்சிப்போக பல கிராமங்கள் பாழடைந்து, துர்க்கனவாகின. குறிப்பாக தமிழர் தேசத்தின் எல்லையோரக் கிராமங்கள், தீவுப்பகுதிகள் தங்கள் மக்களைப் பிரிந்து, ஆள்களற்ற நிலங்களாக மாறின.

இந்தநிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் பேரினவாதம், இந்த ஆள்களற்ற நிலங்களை கபளீகரம் செய்து, பேரினப்பரம்பலை விரிவாக்கம் செய்துகொண்டிருக்க, மறுபுறத்தே தமிழ் மக்களின் குடிப்பரம்பல் தேய்ந்துகொண்டிருக்கிறது. இதன் விளைவாக, மிக விரைவில் இலங்கையின் சனத்தொகையில் இரண்டாவது நிலையில் இருந்து மூன்றாவது நிலைக்கு தமிழர்கள் தள்ளப்படப் போகின்றார்கள். இப்படிப்பட்ட நிலையில், குழந்தைப் பேறின்மை தமிழர்களிடம் அதிகரிக்கத் தொடங்கியிருப்பதானது, இப்போதுள்ள தமிழினக் குடிப்பரம்பலில் இன்னும் வீழ்ச்சியை உண்டுபண்ணப்போகின்றது என்பதையே மேலே சொல்லப்பட்ட மருத்துவ நிபுணரின் கூற்று உறுதி செய்கின்றது. வாழ்வியல் மாற்றங்கள், உறவுநிலைச் சிக்கல்கள், நவீன உணவுமுறை, தவறான மருந்துக் கையாள்கைகள் என்பன இவ்வாறான குழந்தைப் பேறின்மைக்குக் காரணமாக இருக்கலாம் என சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். முன்னரெல்லாம் கூட்டுக்குடும்ப வாழ்வியலில் மக்கட்பேறுக்கும், மகிழ்ச்சிக்கும் குறையே இருந்ததில்லை. இன்று எல்லோரும் செல்போன்களோடு மட்டுமே உறவாடி, தனித்தனி உலகங்களாக இயங்கிக் கொண்டிருப்பதால், மகிழ்ச்சியுமில்லை, மக்கட்பேறிலும் குறைபாடு.

பொதுவாகவே யாழ்ப்பாணத்தவர்கள் சிக்கனமானவர்கள் என்று சொல்லப்படுவதுண்டு. அதனாலோ என்னவோ, கடந்த சில தசாப்தங்களாக 'நாமிருவர், நமக்கிருவர்' என்பதைப்போல, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மக்கட்பேறினை தக்கவைத்தார்கள். இப்போது அதுவும் சுருங்கி, ஆசைக்கும் ஆஸ்திக்குமென ஒரு பிள்ளையோடு மட்டுப்படுத்தும் கலாசாரம் பெருகத் தொடங்கியுள்ளது. இன்னும் சில தம்பதியரோ திருமணமாகி, சில வருடங்களுக்கு குழந்தைப் பேறினை ஒத்திப்போடுகின்றார்கள். இதற்காக அவர்கள் கைக்கொள்ளும் மருந்துவகைகளும் நிரந்தரமான குழந்தைப் பேறின்மைக்கு வழிவகுத்து விடுகின்றன. இப்படி பல காரணிகளால் உண்டாகும் இந்தக் குழந்தைப் பேறின்மையின் இறுதி விளைவு ஓர் இனத்தின் சரிவுக்கே காரணமாகிவிடவும்கூடும். 'இருப்பை இழந்த இனம்' என்ற வரலாற்றுத் தவறுகளுக்கு இடமளிக்காமல், சரியான சிகிச்சைகளைப் பெறுவதன்மூலம் எல்லா வீடுகளிலும் பிள்ளைக்கனியமுதுகளின் மழலைக்கீதம் ஒலிக்கட்டும். தமிழினம் தழைக்கட்டும்.

## நாளொரு நல்வார்த்தை

"காலத்தின் மணல் பரப்பில் உன் கால் சுவடுகளை பதிக்க விரும்பினால் உன் கால்களை தரையில் இழுத்து இழுத்து நடக்காதே."

- அப்துல் கலாம்



# தமிழரின் சமஷ்டிக் கோரிக்கையால் தென்னிலங்கையில் அதிருப்தியாம்!

## முதலில் பேச்சுக்கு செல்லவேண்டுமென சமாதானப் பேரவையினர் அறிவுறுத்து



கொழும்பு, டிசெ. 5

தமிழ்த் தரப்பின் சமஷ்டி நிபந்தனையால் தென்னிலங்கையில் எதிர்மறையான நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மக்கள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சை மேற்கொள்வதற்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில், தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான இனப் பிரச்சினைக்குத் தீர்வு உள்ளிட்ட மூன்று விடயங்களை வெளிப்படுத்தியுள்ளன.

இதுகுறித்து கருத்துவெளியிடும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவர்களின் பிரதிநிதிகளுடன் பேச்சை முன்னெடுப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தப் பேச்சில் தமிழ்த் தரப்புக்கள் பங்கேற்பது மிகவும் முக்கியமானது.

ஆனால், பேச்சு மேசையில் அமர்வதற்கு முன்னதாக, இணைந்த வடக்கு - கிழக்கு உட்பட சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்ற விடயத்தை அந்தத்தரப்பு பிரதான தீர்வாக முன்வைத்துள்ளது.

இது இந்தப் பேச்சுக்கான நல்லெண்ண சமிக்ஞை வெளிப்பாடுகளை பின்னடையச் செய்வதற்கான முயற்சியாகும்.

ஆகவே, தமிழ்த் தரப்பு இவ்வாறு பகிரங்கமான நிபந்தனைகளை விடுத்து, பேச்சு மேசைக்குச் சென்று, அதன் பின்னர் சில விடயங்களை முன்வைக்கவேண்டும்.

அதில் மிக முக்கியமாக, மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துதல், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தல், அதற்கு அடுத்தபடியாக, இந்தியாவின் முறைமையைப் பின்பற்றி இறுதித் தீர்வைக் காணுதல் உள்ளிட்ட படிநிலைகளில் செல்லமுடியும்.

ஏனென்றால், ஆரம்பத்திலேயே தென்னிலங்கைக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் தமிழ்த் தரப்பு நிபந்தனைகளை விதித்தால், அது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடுமையான அழுத்தங்களை ஏற்படுத்தும்.

ஆகவே, பேச்சை ஆரம்பிக்கும்போது, கடுமையான விடயங்களை முன்வைப்பதானது ஒற்றையாட்சியை எதிர்க்கும் தமிழர்களும், சமஷ்டியை எதிர்க்கும் சிங்களவர்களும் எதிரெதிர் முனைகளில் முரண்பட்டுக்கொள்ளும் சந்தர்ப்பங்களையே தோற்றுவிக்கும் - என்றார். (ம)

நாளை

06.12.2022
செவ்வாய்க்கிழமை
கார்த்திகை 20

சுபநேரம் : 10.47 - 12.17
ராகுகாலம்: 03.17-04.47

திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் 70ஆவது ஆண்டுவிழா, சங்கத் தலைவர் மருத்துவர் ப.சத்தியநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கலை, கலாசார அம்சங்களுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

(ம-110)



மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத்தினர் மானிப்பாய் பிரதேச மருத்துவமனையுடன் இணைந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை இலவச மருத்துவமுகாமொன்றை சுதுமலை பாரதி வித்தியாலயத்தில் முன்னெடுத்தனர். பெருமளவான மக்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

(ம-125)



'வன்னி கோப்' அவுஸ்திரேலிய நிறுவனத்தின் இலங்கைக்கான அலுவலகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் - கலட்டிப் பகுதியில் திறந்துவைக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மக்களுக்கான உலர் உணவுப் பொதிகள் ஆகியனவும் இதன்போது வழங்கப்பட்டன.

(ம-27)



தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான விசேட செயலமர்வொன்று ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றது.

(ம-19)


# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 - 11 - 1939

மறைவு 05 - 12 - 2017

அமரர் திருமதி

## இராமலிங்கம் யோகாம்பிகை

(புங்குடுதீவு - 12 - நாரந்தனை)

"பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய், எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு இனியவளாய்
வாழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்து
ஆண்டுகள் ஐந்து மறைந்ததம்மா!
எங்கள் உள்ளங்களில் என்றும்
- நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆதமா சாந்தியடைய எல்லாம் வல்ல
தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளை
வணங்கிவேண்டுகின்றோம்

என்று உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்,
உறவினர்கள்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

(cs.22080) (2.6)

எங்கள் நெஞ்சை விட்டு அகலாத

# 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14.12.1935

மறைவு 17.11.2002

அமரர்

## சுப்பிரமணியம் கந்தசாமி

(ஓய்வுபெற்ற இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர்– சாவகச்சேரி)

திதி: திரியோதசி

இரு தசாப்தம் கடந்திட்டோம் ஐயா!
உங்கள் நினைவுகளைச் சுமந்து கொண்டே
நினைக்காத நாளென்று எதுவுமில்லை
என்றும் எங்கள் சிந்தனையில் வாழ்கின்றீர்கள்
அன்பு முகமும் அறிவுரைகளும் எம்
நெஞ்சை விட்டகலாது ஐயா!

4 ஆம் குறுக்குத்தெரு,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS22083) (2.6)

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## குருநாதர் சுந்தரமூர்த்தி



தோற்றம் 04.11.1933

மறைவு 05.12.2013

ஆண்டொன்பது ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால்
மனம்வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம்
என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்கும் அன்புத் தெய்வமே!
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்.

கொட்டோலை,
துர்க்காபுரம்,
தெல்லிப்பளை.

நினைவுகளுடன்
மனைவி, மகள்,
பேரப்பிள்ளைகள்.

(cs.22085) (2.6)

# 26 ஆவது ஸ்தாபகர் ஞாபகார்த்த நினைவு நாள்



தோற்றம் 25.10.1936

மறைவு 05.12.1996

அமரர்

## பொன் நாகமணி

(மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்)

நாகத்திற்கு மணி போல
மட்டுவிலில் வளர்மதி....
நாகமணி ! நீ விட்ட விதை
பெரு மரமாகி ஆழ
வேரோடியிருக்கிறது
இன்று

ஒரு ராஜாளியைப் போல
கம்பீராமாய் நிற்கிறது
உம் நினைவுச் சிற்பங்களாய்
தாய்ச்சங்கம் விளையாட்டு அரங்கு
கல்விக்கழகமென

இசையின் மாண்பு கண்டு
கருத்தாய் ஒற்றுமை உணர்ந்து
நிவேதனப் பொக்கிஷமாய்
நீர் படைத்தீர் வளர்மதியை....


காலம் உள்ளவரை
மங்கிடாது வளர்மதியும்
அதன் புகழும்
உம் நாமமும்

அறிவும் நல்லொழுக்கமும்
தம் ஆரோக்கியமும்
அச்சாரம் எனக்கொண்டு
அழகாய் நடை போடும்
ஸ்தாபக நாயகனே

இன்றும் என்றும்
தலை சாய்த்து வணங்கி
உம் ஆத்மா சாந்தி பெற
பிரார்த்திக்கின்றோம்.....

நிர்வாகம்
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையமும்,
அதன் உப அமைப்புக்களும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமய நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில், மன்னாரிலிருந்து சர்வமதக் குழுவொன்று அண்மையில் கிளிநொச்சிக்கு வருகைதந்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மதத்தலங்களைத் தரிசித்ததுடன் மதத்தலைவர்களுடனும் கலந்துரையாடியது. (ச-56)



யாழ்ப்பாணம் போக்கட்டி அ.த.க. பாடசாலையில் தரம் 5 மாணவர்களின் சுற்றாடல்சார் செயற்பாட்டு பட்டறை அண்மையில் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது. (ச-159)


## வாழ்த்துகின்றோம்

வட மாகாண தேசிய நிர்மாணிகள் சங்கம்
இன்று (05.12.2022) தங்களது புதிதாக
அமைக்கப்பட்ட அலுவலகத்தில் கடமைகளை
ஆரம்பிக்க இருப்பதையிட்டு
**சீ.ஜீ.எவ். (C.G.F)**
மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது.
**இந்த திறப்பு விழாவை சம்பிரதாய பூர்வமாக**
வடமாகாண பிரதம செயலாளர்
திரு.எஸ்.எம். சமன் பந்துலசேன (Mr.S.M. Saman Bandulasena)மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.
அவர்களுடன் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. கே.மகேசன் (Mr.K.Mahesan). தலைவர் NCASL தலைமைக்காரியாலயம் திரு. B.சுசந்த ரஞ்ஜித் லியனாரச்சி (Mr.D.Susantha Ranjith Liyanarachchi) மற்றும்தலைவர் NCASL வடமாகாணக்கிளை திரு. ஏ.அன்ரன் றீமன்ஸ் குறூஸ்(Mr.A.Anton Remens Croos)
பங்குபற்றுவார்கள்
வாழ்த்துவோர்:- நிர்மாண உத்தரவாதநிதி
**(CGF)**
(Cs 47977) (2:6)




கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளையால் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய மட்ட மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு வங்கியில் சேமிப் புக்கணக்குகள் ஆரம்பிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கிருபாகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ச-159)



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ம-27)



சட்டம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வொன்று, முத்தமிழ் சனசமூக நிலையத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிறுவனத்தால் நடத்தப்பட்ட செயலமர்வில் வளவாளராக சட்டத்தரணி கார்த்திகா கலந்துகொண்டார். (ம-27)

# கேள்வி அறிவித்தல்.
# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# சபை நிதி 2021, 2022

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபை நிதியினை கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி** 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 16:00 மணிவரை 2022.12.05 ஆம் திகதியில் இருந்து 2022.12.18 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** அவர்களிடமிருந்து 2022.12.05 ஆம் திகதியிலிருந்து 2022.12.18 ஆம் திகதி வரையான, வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா **2000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2022.12.19 ஆம் திகதி மு.ப 14:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது
10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2022.12.12 ஆம் திகதி மு.ப.11:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம |
| NP/14/41(13)/ 2/Council/PIII/ 2022/01 | உப அலுவலக திருத்தம், கோப்பாய் - கட்டம் II | 5.03 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 77 நாட்கள் | 51,000.00 | 2023.04.03 |
| NP/14/41(13)/ 2/Council/PIII/ 2022/02 | மீன் சந்தை திருத்தம், உரும்பிராய். | 0.63 | 60 நாட்கள் | C 9 அல்லது C8 | 49 நாட்கள் | 6,300.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/ 2/Council/PIII/ 2022/03 | உப அலுவலக கட்டட திருத்தம், உரும்பிராய். | 3.55 | 60 நாட்கள் | C8 அல்லது C7 | 63 நாட்கள் | 36,000.00 | 2023.03.20 |
| NP/14/41(13)/ 2/Council/PIII/ 2022/04 | சிறுவர் பூங்கா நில மட்டப்படுத்தல், நீர்வேலி - கட்டம் II | 0.78 | 60 நாட்கள் | C 9 அல்லது C8 | 49 நாட்கள் | 8,000.00 | 2023.03.06 |
| NP/14/41(13)/ 2/Council/PIII/ 2022/05 | மீன் சந்தை மற்றும் இறைச்சி கடை கட்டூமானம் - தொரடர்வேலை, அச்சுவேலி. | 9.99 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 77 நாட்கள் | 100,000.00 | 2023.04.03 |
| NP/14/41(13)/ 2/Council/PIII/ 2022/06 | மலசல கூடம் அமைத்தல், பிரதேச சபை தலைமை அலுவலகம், புத்தூர். | 5.53 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 77 நாட்கள் | 56,000.00 | 2023.04.03 |

தியாகராஜா நிரோஷ்
தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
யாழ்ப்பாணம்.
2022.12.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 06 . 03 . 1948 — இறப்பு 07 . 11 . 2022

## அமரர் இராசரத்தினம் வள்ளியம்மா

கடந்த (07.11.2022) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் இராசரத்தினம் வள்ளியம்மாவின் மறைவுச் செய்தி அறிந்து எமது துயர் பகிர்வில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், உள்நாடு, வெளிநாட்டிலிருந்து தொலை பேசி மூலமாகவும் அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியை கள் நாளை (06.12.2022) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள நாளை மறுதினம் (07.12.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடை பெறுவதுடன் அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறம் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(cs.47983) (2.6)


குடும்பத்தினர்.
077 175 5777
077 428 1262

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 05.11.2022 சனிக்கிழமை அன்று சிவபதடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் குகதாசன் விமல்ராஜ்

(தாதிய உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை)



அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசன நிகழ்வுகள் இன்று (05.12.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில்அவரது இல்லத்தில் இடம்பெறும்.


இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்

குடும்பத்தினர்
077 880 2555, 077 994 3979

(CS 47853) (2.6)

# ஓராண்டு நினைவு கூரல்



## முத்துராஜா இரவீந்திரன்

16.07.1968 - 17.11.2021

ஆண்டு ஒன்றைக் கடந்தாலும்
அகம் முழுவதும் மீண்டும் மீண்டும்
நிரம்பிக் கொண்டிருக்கும் உங்கள்
நினைவுகளோடு
வாழ்ந்து கொண்டிருக்கிறோம் அப்பா
நீண்டு கடக்கும் இந்தக் கனத்த காலங்கள்
நிழலாடும் விம்பங்கள் தாங்கிய
உங்கள் பாவனைப் பொருள்கள்
வேண்டும் எங்கள் அப்பாவென்ற
உள்மன அழுகையை தாண்ட
முற்பட்டுத் தோற்றுப் போகிறோம்
அப்பா இருந்தும் நிலையாமை
பொருந்திய இந்த உலகு கடந்து
உங்கள் ஆத்மா இறையடி பொருந்தி
நிலைபேறு பெற வேண்டி வணங்கி
நிற்கின்றோம் அப்பா

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 47853) (2.6)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 14 . 12 . 1984 — மறைவு 06 . 11 . 2022

## அமரர் விஸ்வநாதன் சத்யேந்திரா

(இலங்கை வங்கி உத்தியோகத்தர் - தலைமைக்காரியாலயம்-கொழும்பு)

நல்ல மகனாய், உற்ற கணவனாய், பாசமிகு அப்பாவாய், அன்புச் சகோதரனாய், உறவுகளுக்கு உயர்ந்த உறவாய், மைத்துனராய், நல்ல நண்பனாய் பாசமே வேதமாய் வாழ்ந்து - கடந்த 06.11.2022 அன்று இறைபதமடைந்த எமது செல்வத்தின் மறைவுச் செய்தியால் எமது துயர் பகிர நேரில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனுதாபச்செய்திகளை, தொலைபேசி, மின்னஞ்சல், சமூக வலைத் தளங்கள் மூலமும் தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு,

எமது செல்வத்தின் அந்தியேட்டி நிகழ்வுகள் நாளை (06.12.2022) செவ்வாய்க்கிழமை எமது வீட்டில் இடம்பெறுவதுடன் மதியம் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"வையகம்",
சிலாவத்தை,
முல்லைத்தீவு.

குடும்பத்தினர்
(தாய்,சகோ[illegible])
077 3364 645

# மரண அறிவித்தல்



பிறப்பு 18 . 04 . 1953 — இறப்பு 04 . 12 . 2022

## சிவஞானம் வீரேந்திரன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை)

உடுவில் தெற்கு, மானிப்பாயை (சுதுமலை ஈஞ்சடி வைரவர் கோவிலடி) பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் வீரேந்திரன் நேற்று (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மரு மகனும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும், ஞானாகரன் (அபிவிருத்தி உத்தி யோகத்தர் - கட்டடங்கள் திணைக்களம் - முல்லைத்தீவு), விமலினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கரைச்சி பிரதேச செயலகம்- கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசிகா (ஆசிரியர் - புங்குடுதீவு மத்திய கல்லூரி), ஜங்கரன் (நீர்ப்பாசன வடிகாலமைப்பு சபை- மன்னார்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிறிராம், அபிநயா ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்ற பத்மாவதியின் சகோதரனும், நாகேந்திரம் (தாவடி), தெய்வேந்திரம் (இணுவில்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஞ்சடி வைரவர் கோயிலடி,
சுதுமலை.

(CS 47980) 1/6

தகவல்:
குடும்பத்தினர்.
077 977 3001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரவள்ளி செய்கையில் ஆர்வம்

யாழ். டிசெ. 5 யாழில் விவசாயிகள் பலர் மரவள்ளிச் செய்கையில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். மரவள்ளிக்கிழங்கின் விலை அதிகரிப்பை அடுத்து கூடுதலான விவசாயிகள் மரவள்ளி செய்கையில் ஈடுபட்டுள்ளனர். நீர்வேலி, கோப்பாய், புத்தூர், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், ஈவினை போன்ற பல பகுதிகளில் பரவலாக மரவள்ளி செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை- தற்போது மரவள்ளிக்கிழங்கின் விலை திடீரெனக் குறைந்து ஒரு கிலோ 150 ரூபாவாக சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. (ஒ-14-17)



## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 30 . 09 . 1944

மறைவு 03 . 12 . 2022

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் முன்னாள் இ.போ.ச. நடத்துனருமாகிய

**சின்னப்பு கணேசலிங்கம் (ராசா)**

**(முன்னாள் மாரி அம்மன் ஆலய நிர்வாகி)**

அவர்கள் கடந்த (03.12.2022) சனிக்கிழமை கனடாவில் (Toronto) சிவபதம் அடைந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு கோப்பாய் தெற்கு மாரி அம்மன் கோவில் நிர்வாகத்தினர் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கோப்பாய் தெற்கு மாரியம்மன் ஆலய நிர்வாகத்தினர்.**

## 1ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்



ஜனனம் 14 . 12 . 1952

மரணம் 05 . 12 . 2021

**திருமதி மேரி பொளின் ஜேந்திரா**

(ராஜக்கோன்)

அன்பு மழை பொழிந்து
ஆசையுடன் அரவணைத்து
அழகுச் சிரிப்புச் சிந்தி
கண்ணின் மணியாய்
அவனிதனில் எமைக்காத்து
வாழ்வில் நாம் உயர வழி பல காட்டிய
மார்கழிப் பூவே - என்றும்
எம்மனப் பூங்காவில் சுகந்த மணம் பரப்பி
நிஜமாய் இருக்க
அன்புடன் இறை அருள் உமக்காய்
வேண்டி இறைஞ்சி நிற்கும்

இல.32, றாக்காலேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(CS 22088) (2.6)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கந்தையா குணராசசிங்கம்

**(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்-தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)**



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணராசசிங்கம் (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர் - தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) அவர்கள் நேற்று (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா கனகேஸ்வரி நடராசா கமலவதனி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவமலரின் அன்புக் கணவரும், தனபாலசிங்கத்தின் பாசமிகு சகோதரனும், அமரர் சிவகஜன், சிந்துஜா (ஜேர்மனி), சிவசுதன் (யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகர் (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு மாமனாரும், ஆருசா (ஜேர்மனி), அஜெய் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவகணேஸ், சிவலோகன் மற்றும் சிவயோகன், சிவசீலன், நேசராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2022) திங்கட்கிழமை பி.ப 1 மணியளவில் அவுரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CR 38671) 1-6

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 15 . 02 . 1943

இறப்பு 29 . 11 . 2022

# இலட்சுமணன் தம்பிராசா

**(மெக்கானிக் தம்பிராசா)**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமணன் தம்பிராசா அவர்கள் கடந்த (29.11.2022) அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இலட்சுமணன் - சின்னாச்சி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பாலன் - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2022) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் உரும்பிராய் ஒஸ்கா லேனடியில் உள்ள வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



**திருமதி கேமலதா சிவரூபன்**

**(நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர், நிதிக்கிளை, உயர்நீதிமன்றம், யாழ்ப்பாணம்)**

யாழ்.பலாலியை பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கேமலதா சிவரூபன் அவர்கள் கடந்த (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.
அன்னார் முத்துலிங்கம், இராஜேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், தங்கவேல், கற்பகவதி தம்பதிகளின் அன்பு மருமகளும், தங்கவேல் சிவரூபன் (பரீட்சைக்கிளை, யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புமனைவியும், சாருஜன்(மாணவன், தரம்-7, யாழ். இந்துக்கல்லூரி) அவர்களின் பாசமிகு தாயாரும், தங்கேஸ்வரன்(சுவிஸ்), சுமலதா (லண்டன்), பிறமலதா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவநேசன் (யாழ். பல்கலைக்கழகம்), சிவதேவி (வலயக் கல்வி அலுவலகம், தீவகம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.12.2022) செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
0777222600

(CS 22099) 1/6

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டேவிட் பீரிஸ் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட பெண்கள் வலுவூட்டல் பயிற்சி நெறியை நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம-159)



மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் மன்னார் பட்டித்தோட்டத்தில் அமைந்துள்ள வயோதிபர் இல்லத்தில் 'சிரேஷ்ட பிரஜைகளுடன் ஒரு நாள்' எனும் தொனிப்பொருளில் நிகழ்ச்சித் திட்டமொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் மூத்த பிரஜைகளுக்கு உதவித்திட்டங்களும் வழங்கப்பட்டன. (ச-60)






வரணி மத்திய கல்லூரியில் இரண்டு திறன் வகுப்புக்கள் அண்மையில் அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் திறந்து வைக்கப்பட்டன. புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் இந்த வகுப்பறைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. (ம-159)

# திறன்வகுப்பறை திறப்பு


யாழ்ப்பாணம், டிசெ. 5

கைதடி - நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கென திறன்வகுப்பறை திறப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி த.சியாமளா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

அனைத்துலக சுகாதார அமையம் மற்றும் தென்மராட்சி அபிவிருத்திக்கான சர்வதேச அமைப்பு ஆகியவற்றின் நிதிப்பங்களிப்பில் இந்த திறன்வகுப்பறை அமைத்துக்கொடுக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ. வரதீஸ்வரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கிருபாகரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ச-131,159)

வவுனியா கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் சு.வீரசிங்கத்தின் 24ஆவது வருட நினைவுதினம் சங்கத்தின் தலைவர் சிவசோதிநாதன் தலைமையில் அண்மையில் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சங்கத்தின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர். (ம-110)





ஐ.நா. அபிவிருத்திட்டத்தின் 8 லட்சம் ரூபா நிதியனுசரணையில் உள்ளூராட்சிச் சபைகளின் பெண் உறுப்பினர்களுக்கான மூலோபாய உதவித் திட்டத்தின் கீழ், வீட்டுத்தோட்டப் பயிர்கள் வழங்கும் நிகழ்வு வலி.மேற்கு பிரதேசசபையின் பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-27)



வலிகாமம் வடக்குப் பிரதேசசபை, காங்கேசன்துறை பொதுநூலகம் ஆகியவை இணைந்து காங்கேசன்துறையில் இருந்து கிளிநொச்சி வரை யாழ். ராணி புகையிரதத்தில் நடமாடும் நூலக சேவையையும், பாலின சமத்துவம், போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையையும் அண்மையில் முன்னெடுத்தன. (ம)



தேசிய ரீதியிலான கால்பந்தாட்டத்தில் கிண்ணம் வென்ற மகாஜனக் கல்லூரி அணியினருக்கு அண்மையில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் கௌரவிப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர் சிவஸ்ரீ, உதவிப் பிரதேச செயலாளர், மகாஜனக் கல்லூரி அதிபர், கல்விச் சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு டிப்ளோமா கற்கைநெறிகள் யாழ். பல்கலையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

வங்கியலும், நிதியும் மற்றும் தொழில்சார் ஆங்கிலம் ஆகிய இரு டிப்ளோமா கற்கைநெறிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் கீழ் நடத்தப்படவுள்ள இரு கற்கைநெறிகளினதும் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

இந்தக் கற்கைநெறிகளுக்கான வளவாளர்களாக அந்தந்தத் துறைகளில் தேர்ச்சி பெற்ற தொழில்சார் வல்லுநர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-ஒ-125)

# 2 வாள்களுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 5

2 வாள்களுடன் 38 வயதான இளைஞனை சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இணுவில் ரயில் நிலையத்துக்குப் பின்னால் உள்ள வீடொன்றில் வாள்கள் இருப்பதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அந்த வீட்டை நேற்று சோதனையிட்டுள்ளனர். இதன்போது அந்த வீட்டிலிருந்து 2 வாள்கள் மீட்கப்பட்டுள்ளன. 38 வயதான இளைஞர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-125)

# வரி விதிப்பில் மாற்றங்கள்

கொழும்பு, டிசெ. 5

பெரிய வெங்காயம் மற்றும் ரின் மீன்களுக்கு விதிக்கப்பட்டுள்ள விசேட வர்த்தக வரியை திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் 22ஆம் திகதி முதல் ஒரு கிலோ வெங்காயத்துக்கு விதிக்கப்பட்டிருந்த 50 ரூபா விசேட வர்த்தக வரி 10 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த மே மாதம் 18 ஆம் திகதி முதல் ஒரு கிலோகிராம் ரின் மீன்களுக்கு அறவிடப்படும் 100 ரூபா விசேட வர்த்தக வரி 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-இ)

## மருத்துவரின்...

குறிக்கும் அடையாளம் பொறிக்கப்பட்ட காரை மறித்து பொலிஸார் ஆவணங்களைப் பரிசோதித்தபோது, காரிலிருந்தவர்களின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த பொலிஸார் அவர்களைச் சோதனையிட்டுள்ளனர்.

சாரதியிடமிருந்து 600 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்னும், அவருடன் பயணித்தவரிடமிருந்து 430 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்னும் மீட்கப்பட்டுள்ளது.

காரின் சாரதியின் சகோதரர் மருத்துவர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை - இவர்களிடமிருந்து தலா 2 கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தபோதும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அதனை மறுத்தார்.

மேலும், வழமையாக இவ்வாறான கைதுகள் இடம்பெற்றால் ஊடகங்களுக்கு தகவல்கள் வழங்கும் பொலிஸார் மேற்படி சம்பவம் தொடர்பில் எந்தத் தகவலையும் கசியவிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5-125)

## தமிழ்க்...

'சகோதர இனங்கள், பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தார்மீக ஆதரவை வழங்கும் அதேவேளை, தத்தம் கள நிலைமைகளுக்கு ஏற்ப மாறுபட்ட கோரிக்கைகளுடன் அரசுடன் உரையாடுவதே சரியானது. தென்னிலங்கையில் நாம் முன்வைக்கும் கோரிக்கைகளை காரணமாகக் கொண்டு, ஈழத்தமிழ் கட்சிகளின் தேசிய கோரிக்கைகளை நிராகரிக்கவோ அல்லது, வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளைக் காட்டி எமது தேசியக் கோரிக்கைகளை நிராகரிக்கவோ அரசாங்கத்துக்கு சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. எமக்கிடையே பிளவுகள் இருப்பதாகக் காட்டி, அரசு விளையாட நாம் இடம் கொடுக்கவும் கூடாது. அரசாங்கத்தை அந்த இராஜதந்திரத்துடன் அணுகும் நடைமுறையை கூட்டமைப்பு, கூட்டணி ஆகியவற்றுக்கு இடையில் நடைபெறும் பேச்சு தீர்மானிக்கவேண்டும்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-5)

## வாட்டியெடுக்கும்...

யாக மருத்துவரை அணுகி மருத்துவ ஆலோசனை பெறுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இந்த வைரஸ் காய்ச்சல் தொடர்பில் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் கர்ப்பிணிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-ஒ-இ)

## நள்ளிரவில்...

டில் 10 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேர் மது அருந்தியிருந்தனரென மருத்துவச் சோதனைகளில் தெரியவந்துள்ளது.

மானிப்பாய் - சங்குவேலிப் பகுதியில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பொலிஸார் வீதியால் சென்ற ஒருவரை வழிமறித்து சோதனையிட்டனர். இதன்போது அவரை மதுபோதையில் வாகனத்தை செலுத்திய சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்தனர். அவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக தெல்லிப்பழை சட்டமருத்துவ அதிகாரியுடன் பொலிஸார் தொடர்பு கொண்டுள்ளனர். மருத்துவர் தனது வதிவிடத்துக்கு அண்மையாகவுள்ள கோப்பாய் ஆதார மருத்துவமனைக்கு வருமாறு பொலிஸாரை அறிவுறுத்திவிட்டு, சனிக்கிழமை நள்ளிரவு நேரம் மருத்துவமனை நோக்கிப் பயணித்துள்ளார்.

அப்போது, பருத்தித்துறை பிரதான வீதியில், கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அண்மையாக வீதியை முழுவதுமாக மறித்து 10 இளைஞர்கள் வரையில் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வீதியால் பயணித்த சட்ட மருத்துவ அதிகாரியின் காரின் மீதும் 'ரோச் லைட்' வெளிச்சத்தை பாய்ச்சி அதனை மறிக்க முற்பட்டுள்ளனர். இருப்பினும் சட்ட மருத்துவ அதிகாரி பிரதான வீதியின் கரையோரமாக காரைச் செலுத்தியுள்ளார். இதன்போது அவரது காரின் பக்கக்கண்ணாடி உடைந்துள்ளது.

சட்டமருத்துவ அதிகாரி கோப்பாய் ஆதார மருத்துவமனைக்குச் சென்றபோது, அங்கு வந்த மானிப்பாய் பொலிஸாரிடம் நடந்த விடயத்தை அவர் தெரியப்படுத்தியுள்ளார். இதனையடுத்து கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று அங்கு நின்ற 10 இளைஞர்களையும் கைது செய்தனர். அவர்களின் 2 மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இவர்கள் நேற்று மாலை பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ஒ-5-125)

## சாப்பாட்டுக்...

உணவகத்தில் நேற்றுக் காலை உளுந்து வடையை வாங்கிய ஒருவர், அதனை எடுத்துச் சென்று வீட்டில் அதனை பிரித்துப் பார்த்தபோது அதனுள் உயிரிழந்த நிலையில் கரப்பான் பூச்சி காணப்பட்டுள்ளது. உடனடியாக இதுகுறித்து யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

அவர்கள் கடைக்கு நேரில் சென்று பரிசோதனைகளை மேற்கொண்டனர். கடைக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (அ-ஒ-27)

## ரயில்...

நேற்றுக்காலை 7.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் செட்டிக்குளத்தைச் சேர்ந்த கந்தையா மோகனதாஸ் (வயது - 55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டிலிருந்து குறித்த நபர் தனது விவசாயக்காணியை பார்வையிடுவதற்காக மெனிக்பாம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றபோது, அங்கிருந்த புகையிரதக் கடவையை கடக்க முற்பட்ட நிலையில் மன்னாரிலிருந்து மதவாச்சி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த புகையிரதத்துடன் அவர் மோதுண்டுள்ளார்.

அங்கிருந்தவர்களால் உடனடியாக மீட்கப்பட்ட அவர் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (அ-ஒ-110)

## சிவில்...

வீதியில் மாங்குளம் சந்திக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் வீதியில் பயணித்த இளைஞர் ஒருவரை சிவில் உடையில் இருந்த சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பணியாளர் மற்றும் வன உயிரிகள் திணைக்கள அலுவலர் மறித்து சோதனையிட முற்பட்டுள்ளனர். அவர்களை அடையாளப்படுத்துமாறு கோரியபோது அவர்கள் தங்களது அடையாள அட்டைகளை காண்பிக்கவில்லை. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு இளைஞரின் சகோதரரும் வந்துள்ளார். அவரும் உத்தியோக அடையாள அட்டையைக் காட்டுமாறு கேட்டுள்ளார். அதன்போது, சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பணியாளர் தனது அடையாள அட்டையைக் காட்டியுள்ளார்.

தற்போதைய சூழலில் பாதுகாப்பு அமைச்சின் கீழான சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினருக்கு வீதியில் செல்வோரை மறித்துச் சோதனையிடுவதற்கான அதிகாரத்தை யார் வழங்கியது? என்று அந்த இளைஞர் கேள்வி எழுப்பியுள்ளார். இதனால் அங்கு வாக்குவாதம் எழுந்துள்ளது. பின்னர் அது கைகலப்பாகவும் மாறியுள்ளது.

இதன்போது சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பணியாளர் மற்றும் வன உயிரிகள் திணைக்களப் பணியாளர் இருவராலும் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து, சோதனைக்காக அவர்களால் மறிக்கப்பட்ட இளைஞர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை- மாங்குளம் பொலிஸார் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அங்கு வந்த பொலிஸாரிடம், பாதிக்கப்பட்ட இளைஞரின் சகோதரர் தங்களைத்தாக்கினார் என்று சிவில் திணைக்களப் பணியாளர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இளைஞரின் சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-113)

## மாணவனுக்கு...

போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

கிளிநொச்சி நகருக்கு அண்மையாகவுள்ள தனியார் கல்வி நிலையத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கல்வி நிலையத்தில் காயமடைந்த மேற்படி மாணவனின் சக மாணவர்கள் போதைப் பழக்கமுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த மாணவன் எந்தவொரு போதைப்பொருள்களையும் பயன்படுத்துவதில்லை என்றும் கல்வியில் மிகச் சிறந்த பெறுபேற்றை பெறுபவன் என்றும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் குடிதண்ணீருடன் மதுபானத்தை கலந்து மாணவனை குடிக்குமாறு ஏனையோர் திணித்துள்ளனர். இதனையடுத்து துவிச்சக்கரவண்டியில் செல்லும்போது மாணவன் வீதியில் விழுந்து காயமடைந்துள்ளான். உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாணவன் மாற்றப்பட்டுள்ளான்.

சம்பவம் தொடர்பில் மருத்துவமனை நிர்வாகம், பொலிஸார் ஊடாக உரிய தரப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

வேலையாள் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு Welding வேலை தெரிந்தவர் தேவை.

தொடர்புகளுக்கு:
077 1300 190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 06.11.2022 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் திருமதி
## கந்தசாமி தனலட்சுமி

(காலஞ்சென்ற இம்பீரியல் அச்சக
உரிமையாளரின் மனைவி)

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (06.12.2022) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை மறுதினம் (07.12.2022) புதன்கிழமை **சுன்னாகத்தில் அமைந்துள்ள M.M. மண்டபத்தில்** நடைபெறும். அதனைத்தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

"ஆண்டு சுபகிருது ஐப்பசி நீள்வளர்
தாண்டு சதுர்த்தசியினில் வேண்டும்
தனலஷ்மி கந்தசாமி சார்ந்தது நல்லாத்மா
தினந்தொழு ஈசனைச் சேர்ந்து"

பிறப்பு
26.03.1940

இறப்பு
06.11.2022

இராமநாதன் கல்லூரி அருகாமை
மருதனார் மடம்.

(CS47979 ) (2/6)

குடும்பத்தினர்
077 662 8719
077 735 0600

## சுற்றுலாத்துறையின் வருவாய் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 5
2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சுற்றுலாத்துறை மூலம் இலங்கை ஈட்டிய வருமானம் 107.5 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது. ஜனவரி தொடக்கம் நவம்பர் வரையான காலப்பகுதியில் சுற்றுலாத்துறையின் மொத்த வருவாய் 1129.4 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ம)

## வீட்டுடன் காணி உடன் தேவை

நாவலர் வீதியை அண்மித்த பகுதியில் தூய உறுதியுடன் உள்ள காணி தேவை. பரப்பு 2-3 உரிமையாளர்களோ, தத்துவக்காரரோ உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 60 33 259

(CS 22096) 1-6

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 160 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

- **A32** பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- **A32** பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ் நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:-**
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- **ஜெயம்**
**077 8147 389**
**077 9865 457**

## வேலை வாய்ப்பு

### Office Clerk - (female)



**தகைமைகள்:**
- சித்தி G. C.E A/L
- ஆங்கில அறிவு - எழுத, வாசிக்கத் தெரிந்தவர்கள்
- கணினி தொடர்பான அறிவும் இருத்தல்

**வயதெல்லை : 20 - 25**

**முக்கிய குறிப்பு:**
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படுவதுடன் திறமைக்கேற்ப மேலதிகமான சலுகைகளும் வழங்கப்படும்

WhahtsApp No.: 077 376 7899
Email : vconitpark@gmail.com

மேற்குறிப்பிட்ட இலக்கத்திற்கு or email இற்கு உங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பிவைக்கவும்.

(cs.47948) (2.6)

**VCON IT PARK (PVT) LTD**
இல. 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 221 1818, 077 034 7899

## காணி விற்பனைக்கு

துணவிச்சந்தியில் வடக்கெல்லையாக சங்கரத்தை - யாழ்ப்பாணம் பிரதான வீதியும், கிழக்கெல்லை அராலி வீதியுமாக அமைந்துள்ள நிலப்பரப்பு 15 குளி 14.61 விஸ்தீரணமுடைய ஆதனம் விற்பனைக்குண்டு. பிரமாண்டமான முறையில் திருமண மண்டபம் மற்றும் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், வைத்தியசாலை, எரிபொருள் நிரப்பு நிலையம் போன்றவை அமைப்பதற்குப் பொருத்தமான உறுதிகளில் எவ்வித பிசகுகளும் அற்ற சரியான முறையில் எல்லைகளிடப்பட்ட ஆதனமாகும்.

(cs.38669) (2.6)

தொடர்புகளுக்கு:
**சு.த. நந்தகுமார் 077 888 0521**
தொடர்புகொள்ளும் நேரம் பிற்பகல் 3.00 - 6.00 மணிவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.